ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2052/31 - 2018 ජනවාරි මස 05 වැනි සිකුරාදා - 2018.01.05

*2052/31 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (262 ஆம் அத்தியாயம்)

*76அ ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படுகின்ற பணிப்புக்கள்*

*1963 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க 1977 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, 1990 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க மற்றும் 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கச் சட்டங்களால் திருத்தம் செய்யப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய நடாத்தப்படவுள்ள 2018 ஆம் ஆண்டிற்கான உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலின் போது அஞ்சல் வாக்காளர்களுக்குரிய எழுத்தாவணங்களை அஞ்சல் மூலம் பகிர்ந்தளித்தல், உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை அஞ்சல் மூலம் பகிர்ந்தளித்தல் மற்றும் தேர்தலோடு தொடர்புடைய வேறு எழுத்தாவணங்களை அஞ்சல் மூலம் விநியோகித்தல் ஆகிய பணிகள் ஏதேனுமொரு காரணத்தால் தடைப்படுவதாகத் தெரியவரின், அப்பணிகளைத் தேர்தல் ஆணைக்குழுவினால் ஏதேனும் அரச நிறுவனமொன்றின் மூலம் அல்லது அரச அலுவலர்களின் அல்லது அதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஈடுபடுத்தப்படுகின்ற ஊழியர்கள் மூலம் அல்லது வேறு மாற்று வழியொன்றின் மூலம் ஆற்றிக் கொள்வது சட்டரீதியானதெனவும், விடயத்திற்கேற்றவாறு அப்பணிகளை ஆற்றிக் கொள்வதற்காக எவரேனுமோர் அரச அலுவலருக்கு தேர்தல் ஆணைக்குழுவினால் விடுக்கப்படுகின்ற அறிவித்தலொன்றுக்கமைய அப்பணிகளுக்கு உதவுவது அவ்வலுவலரின் பொறுப்பொன்றென்பதும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இந்தப் பணிப்புக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் 104ஆ(2) ஆம் உறுப்புரை மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளினால் தேர்தல் ஆணைக்குழுவிற்குக் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமைய வெளியிடப்படுகின்றது.*

*மஹிந்த தேசப்பிரிய,*
*தவிசாளர்,*
*தேர்தல் ஆணைக்குழு.*

*என். ஜே. அபேசேகர,*
*அங்கத்தவர்,*
*தேர்தல் ஆணைக்குழு.*

*எஸ். இரத்னஜீவன் எச். ஹூல்,*
*அங்கத்தவர்,*
*தேர்தல் ஆணைக்குழு.*

*தேர்தல்கள் செயலகம்,*
*சரண மாவத்தை,*
*இராஜகிரிய.*
*2018, சனவரி 05.*

*01-703*

1A - G 26925 — 57 (2018/01) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*